**தேசிய விஞ்ஞான மன்றம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் மன்றத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக மன்றத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது

தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மன்றத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் அந்த நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ளவை தவிர | கடந்த ஆண்டுகள் முதல் வெளியட்டு விற்பனையிலிருந்து கிடைத்த இலாபம் / நட்டம் நிதிச் செயலாற்றல் கூற்றில் தனியாக காண்பிக்கப்பட்டுள்ளது. அது | கணக்குகள் தயாரிக்கும் போது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க |

| | | |
|---|---|---|
| சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும் நிறுவனத்தினால் வெளியீடுகள் விற்பனையிலிருந்து கிடைத்த மொத்த நட்டமான ரூபா 2,034,149 நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இறுதி நிதி விளைவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கவில்லை. எதிர்வரும் ஆண்டின் போது விற்பனை வருமானம் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,575,433 ஆன கடன்பட்டோர் மீதியை தீர்த்து வைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | உரிய ஆராய்ச்சி நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் செயற்திட்டத்திற்குரிய நிதி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படும். | நிறுவனத்திற்கு அறவிட வேண்டியவைகளை விரைவாக அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) ஆராய்ச்சி மானியங்கள் வழங்கும் வழிகாட்டியின் 05 ஆம் பிரிவு மற்றும் ஆராய்ச்சி செயற்திட்டத்திற்கான உடன்படிக்கை நிபந்தனை 2.4(அ) இன் பிரகாரம் ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்து இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஒரு மாதத்திற்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஆராய்ச்சி பூர்த்தி செய்யப்பட்ட 21 மானியங்களின் கூட்டுப்பெறுமதியான ரூபா 10,406,164 ஆன மிகுதிப் பணம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு 06 மாதங்கள் முதல் 03 | மிகுதிப் பணத்தை தீர்த்து வைப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட மீள்நினைவூட்டல் செயற்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது தொடர்பாக மானியம் பெற்றவர்களுக்கு அறிவிக்கும் நிகழ்ச்சித் திட்டமும் 2022.03.25 ஆந் திகதி அமுல்படுத்தப்பட்டிருந்தது. | அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வருடங்களுக்கு இடையிலான காலவீச்சைக் கொண்டிருந்த போதிலும் 2022 மார்ச் கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,722,038 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 23,467,308 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 10,745,270 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் மீண்டெழும் மானியம் ரூபா 18,590,000 இனாலும், வெளியீட்டு விற்பனை இலாபம் ரூபா 885,829 இனாலும் குறைவடைந்திருந்த போதிலும் ஊழியர் சம்பளம் ரூபா 10,400,506 இனாலும், அலுவலக நிர்வாக செலவினம் ரூபா 9,888,381 இனாலும் மற்றும் மூலதன செலவினம் ரூபா 14,222,730 இனாலும் குறைவடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவைகள் தொடர்பாக சரியான ஆய்வு மற்றும் பகிர்ந்தளித்தலுக்காக சரியான திட்ட முறைமையொன்று இன்றி அச்சிடப்பட்டிருந்த கிரயம் ரூபா 1,162,125 பெறுமதியான 11 வகைகளுக்குரிய 9,900 வெளியீடுகள் மீளாய்வாண்டின் போது இருப்பிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது. | 2010 நவம்பர் 15 ஆந் திகதி முகாமைத்துவ சபையிலிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் 06 மாதங்களை விட பழைய நாளிதழ்களின் பெறுமதியில் 50 சதவீதமும், ஒரு வருடம் பழைமையான நாளிதழ்களின் பெறுமதியில் 100 சதவீதமும் ஆன அடிப்படையில் இந்த வெளியீடுகளின் இருப்பு பதிவழிக்கப்பட்டிருந்தது. அது நிதிக்கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கை இலக்கம் 6 இன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | தேவையின் பிரகாரம் பகிர்ந்தளிக்கும் திட்டமொன்று தயாரித்து அதன் பிரகாரம் வெளியீடுகள் அச்சிடப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் ரூபா 1,277,650 செலவில் "Covid-19" நூலில் 150 பிரதிகள் தனியார் நிறுவனத்திலிருந்து அச்சிடப்பட்டிருந்ததுடன் ஒரு பிரதிக்காக ரூபா 7,500 விற்பனை விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. விற்பனையில் எதிர்பார்த்த 50 நூல்கள் அச்சிடப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தினால் உரிய சந்தைப்படுத்தல் முறைமையொன்று தயாரிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வுத் திகதியான 2022 மார்ச் 07 ஆந் திகதி வரையிலும் நூல்களில் 03 பிரதிகள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டிருந்தது, இலவசமாக பகிர்ந்தளிப்பதற்காக 100 பிரதிகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 57 பிரதிகள் மாத்திரம் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | இந்த புத்தகங்களை நீண்ட கால பெறுமதியுடைய தரவுடன் உள்ள புத்தகமாக இருந்தமையால் இதனை விற்பனை செய்து பூர்த்தி செய்தல் விரைவாக மேற்கொள்ள முடியாது அதற்காக நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்டங்களின் போதும் மற்றும் ஏனைய முறைமைகளின் விளம்பரங்களை வழங்கி முறையாக திட்டமொன்றை தாபிக்கப்படும். உத்தேச வெளியீடுகளை காட்சிப்படுத்துதல் மற்றும் விற்பனைக்காக உள்ள கொட்டகைகளை காட்சிப்படுத்தி தேவையான வாசகர்களுக்கு விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தேவை மற்றும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு திட்டமொன்றுடன் வெளியீடுகள், புத்தகங்கள், நாளிதழ்கள் அச்சிடப்பட வேண்டும். |
| (ஆ) பாடசாலை விஞ்ஞான சங்கம், விதாதா நிலையம், வலய மற்றும் மாகாண விஞ்ஞான சங்கங்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கும் விசேட நோக்கத்தில் அச்சிடப்படுகின்ற விதுராவ என்ற பெயருடைய கல்விசார் நாளிதழ்களில் 5,100 பிரதிகள் ரூபா 963,484 கிரயத்தில் மீளாய்வாண்டில் | நாளிதழ்களை பகிர்ந்தளிக்கும் தபால் கட்டணம் போன்ற செலவினங்களை கவனத்தில் கொண்டு அச்சிடப்பட்ட பிரதிகளில் 9 மாத்திரம் சேர்க்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. ஏற்பட்ட Covid-19 தொற்றுநோய் நிலைமையினால் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளும் | தேவை மற்றும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு திட்டமொன்றுடன் வெளியீடுகள், புத்தகங்கள், நாளிதழ்கள் அச்சிடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அச்சிடப்பட்டிருந்தது. இந்த அச்சிடலில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 963 பிரதிகள் மாத்திரமே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | தற்காலிகமாக தாமதமடைந்திருந்தது. |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மன்றத்தினால் 2017 இற்கும் 2020 இற்கும் இடையிலான ஆண்டு காலப்பகுதியில் நான்கு ஆராய்ச்சிகளுக்காக ரூபா 4,084,935 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஆராய்ச்சிகளுக்காக செலவினம் செய்யப்பட்டிருக்குமாயின் உரிய செலவின அறிக்கை அல்லது செலவினம் செய்யப்படாதிருக்கு மாயின் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டுத் தொகை அல்லது தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு மீண்டும் பெறப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இதில் 02 ஆராய்ச்சிகளுக்காக உரிய அறிக்கை பணம் இதுவரையில் அனுப்பப்பட்டுள்ளது. ஒரு ஆராய்ச்சி தொடர்பான மீள்நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது. ஒரு ஆராய்ச்சி தொடர்பாக பொலிசில் முறைப்பாடு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஆராய்ச்சிகளில் தற்போது நிலைமையில் அவதானிக்கக் கூடிய பிரகாரம் காணப்படுகின்ற நிர்வாக முறைமையை விருத்தி செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் ‘‘காலநிலை மாற்றங்கள் மற்றும் தேசிய இடர்’’ என்ற தலைப்பின் கீழ் பெறுமதி ரூபா 61,783,085 ஆன 05 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக மானியம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இந்த ஆராய்ச்சி செயற்திட்டம் தொடர்பாக உரிய நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்காத | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்க கூடிய சந்தர்ப்பம் ஒன்றும் இணங்க முடியாத சந்தர்ப்பம் ஒன்றும் காணப்பட்டது. எனினும் ஆராய்ச்சிகளின் நோக்கத்தை நிறைவேற்றுதல் அல்லது நிறைவேற்றாமை அளவிட முடியாது அந்த மதிப்பீட்டு முறைமை மற்றும் மதிப்பீட்டு சபையின் பார்வையின் பிரகாரம் மாறுபடுகின்றது. ஆராய்ச்சி மூலம் அறிவினை விருத்தி செய்தல் மற்றும் | ஆராய்ச்சி விளைவுகள் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கக் கூடிய பிரகாரம் சாத்தியமான மற்றும் பொருத்தமான தலைப்பின் கீழ் ஆராய்ச்சிகளை ஆரம்பித்து மேற்கொள் வதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் செலவினத்திற்காக அதிக மதிப்பீடு தயாரித்தமை, செயலாற்றல் அறிக்கை மற்றும் நிதிசார் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு தாமதம் அடைந்தமை மற்றும் சமர்ப்பிக்காமை மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்ட பணிகள் நிறைவேற்றாமை, மதிப்பீட்டுக் குழுவினால் செயல்முன்னேற்ற அறிக்கையை மதிப்பிடுவதற்கு தாமதம் அடைந்தமை மற்றும் மதிப்பிடுவதற்கான நடவடிக்கை எடுக்காமை போன்ற விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | விஞ்ஞானத்தை விருத்தி செய்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது செயலாற்றல் அறிக்கை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாமதமான நிதி அறிக்கை பெறப்பட்டுள்ளது. கிடைக்கப் பெறாத அறிக்கைகளுக்காக மீள் நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளது. | ஆராய்ச்சியாளர்கள் செயற்படல் மற்றும் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக் கூடிய வகையில் ஆராய்ச்சிகளின் நடவடிக்கைகளுடன் நெருங்கி மேற்பார்வை செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சுகாதார அறிவியல் தொடர்பான ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட நிதியேற்பாடு ரூபா 250 மில்லியன் ஆக இருந்த போதிலும் 22 செயற்திட்டங்களுக்கான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 566 மில்லியன் ஆக மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமொன்றை பூர்த்தி செய்வதற்கு எடுக்கப்படுகின்ற காலம் மற்றும் செலவாகின்ற மொத்த செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டு அது தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டுள்ள ரூபா 250 மில்லியன் நிதியேற்பாட்டு எல்லையில் எவ்வளவு செயற்திட்டத்தின் அளவு மேற்கொள்ள முடியுமாக இருந்தது என ஆய்வு செய்யப்படாதிருந்ததுடன் மிகவும் முக்கியமான | 2016 பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் ரூபா 250 மில்லியன் நிதியேற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 75 மில்லியன் பெறப்பட்டிருந்த போதிலும் நோய் பரவியமையை குறைப்பதற்காக அத்தியவசியமான மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட இலக்கை அடைந்த செயற்திட்டத்திற்காக அவை கையளிக்கப்பட்டிருந்தது. கொவிட் 19 நோய் நிலைமை காரணமாக நிறுவன முகாமைத்துவத்தின் முன்னுரிமை மாற்றமடைந்திருந்தது. அதன் பிரகாரம் அந்த ஆராய்ச்சி செயற்திட்டங்களின் செயற்பாடுகளை நிறுத்த வேண்டியிருந்தது. அதன் காரணமாக குறித்த நோக்கங்களை அடைவதற்கு முடியாதிருந்தது. | நிதியத்தை ஈடுபடுத்தும் போது செயற்திறனாகவும் வினைத்திறன் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களை சரியாக இனங்கண்டிருக்க வில்லை. ஒரே வகையான செயற்திட்டங்கள் பலவற்றிற்காக தனித்தனியாக நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் தரவு முறைமையை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டம் ஐந்திற்காக கூட்டுப்பெறுமதி ரூபா 37.86 மில்லியன் ஆன நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | சுகாதார அறிவியல் தொடர்பான ஆராய்ச்சி செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய குறித்துரைத்த காலத்தில் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் ரூபா 144.863 மில்லியன் ஆன 12 செயற்திட்டங்கள் 2022 ஆகஸ்ட் கணக்காய்வுத் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த செயற்திட்டங்களில் தாமதம் கணக்காய்வுத் திகதி வரையிலும் 08 மாதங்கள் முதல் 32 மாதங்களுக்கு இடையிலான காலவீச்சினை கொண்டிருந்தது. | இந்த ஆராய்ச்சி செயற்திட்டங்கள் 02 வருடங்கள் முதல் 04 அல்லது 05 வருட காலஎல்லையில் உள்ளது. 03 வருடங்களின் அரைப்பகுதி வரையில் கொவிட் 19 தொற்றுநோய் ஏற்பட்டதன் காரணமாக ஆராய்ச்சியாளர்களுக்கு குறித்துரைத்த காலத்தில் ஆராய்ச்சிகளை பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. எனினும் இந்த செயற்திட்டத்தின் ஆராய்ச்சிகள் தற்போது முடிவடைந்துள்ளது. | குறித்துரைத்த கால அட்டவணையில் மற்றும் உரிய பிரகாரம் நியாயமான காலத்தில் செயற்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு முடியுமான பிரகாரம் திட்ட மிட்டிருக்கின்றதா என செயற்திட்ட மதிப்பீட்டின் போது மிகவும் கவனத்தில் கொண்டு நிதியேற்பாட்டை வழங்குதல் வேண்டும். |
| (உ) | தேசிய விஞ்ஞான மன்றத்தால் தொழில்நுட்ப மானியம் (Technical Grants) மற்றும் போட்டியாளர் ஆராய்ச்சி மானியம் (Competitive Research Grants) இன் கீழ் தொழில்நுட்ப | போட்டியாளர் ஆராய்ச்சி மானிய செயற்திட்டத்தின் சகல மானியங்களும் வணிக மயப்படுத்த வேண்டியதில்லை. அதன் வடிவமைப்பு தொழில்நுட்ப மாதிரிகளில் புதுப்பிப்பதற்கோ அல்லது அபிவிருத்திக்கோ பயன்படுத்தப்படுகின்றது. | அரசாங்கத்தின் நிதியத்தை செலவிட்டு மேற்கொள்ளப் பட்ட ஆராய்ச்சிகளில் எதிர்பார்த்த நோக்கங்களை அடைதல் |

புத்தகங்களை மேற்கொள்வதற்காக பல்கலைக்கழகம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை ஊக்குவித்தல், அரசசார்பற்ற துறையின் நிறுவன புத்தாக்கங்களை செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்யும் இயலளவு மற்றும் இயலுமையை வலுப்படுத்துதல் மற்றும் புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களின் மாதிரிகளை அபிவிருத்தி நோக்காகக் கொண்டு வணிக ரீதியில் கொண்டு வருவதன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மானியங்களை வழங்கியிருந்த போதிலும் 2017-2021 காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட 31 தொழில்நுட்ப மானியங்களில் மொத்தப் பெறுமதி ரூபா 40,468,833 ஆன 16 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் விளைவுகள் வணிக மயப்படுத்தப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே 31 ஆராய்ச்சிகளுக்காக ரூபா 110,120,240 கிரயமொன்றை செய்திருந்த போதிலும் அதில் எந்தவொரு ஆராய்ச்சிக்காகவும் பேடன்ட் பத்திரம் பெற்றிக்கவில்லை.

வேண்டும்.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 11 செயற்பாடுகள் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த சில செயற்பாடுகள் ஆண்டில் ஏற்பட்ட கொவிட் பரவலின் தாக்கத்தினால் அமுல்படுத்தி பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது. சில செயற்பாடுகள் 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 08 செயற்பாடுகளுக்காக இலக்குகள் எண்ணிக்கைரீதியில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியான முறையில் எண்ணிக்கைரீதியில் இலக்குகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திட்டமிடப்பட்ட இலக்குகள் எண்ணிக்கைரீதியில் காண்பிக்கப்படல் வேண்டும். |